| இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2025 | | தேர்வு எண். |
|---|---|---|
| காலம் : 3.00 மணி | XII - பொருளியல் | மதிப்பெண் : 90 |

## பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20×1=20)
2) ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1. ஒரு பொருளாதாரத்தின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக
அ) உற்பத்தியும் பகிர்வும் ஆ) உற்பத்தியும் பரிமாற்றமும்
இ) உற்பத்தியும் நுகர்வும் ஈ) உற்பத்தியும் சந்தையிடுகையும்
2. முதன்மை துறை என்பது ______
அ) தொழில் ஆ) வணிகம்
இ) வேளாண்மை ஈ) கட்டடம் கட்டுதல்
3. மறைமுக வேலையின்மையில் உழைப்பாளியின் இறுதி நிலை உற்பத்தி
அ) சுழியம் ஆ) ஒன்று
இ) இரண்டு ஈ) நேர் எண்
4. ______ சமநிலையை கீசுடைய கோட்பாடு வலியுறுத்தியது
அ) மிக குறுகிய கால ஆ) குறுகிய கால
இ) மிக நீண்ட கால ஈ) நீண்ட கால
5. மிகை பெருக்கி என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்
அ) J.R.கீன்ஸ் ஆ) R.G.D.ஆலன்
இ) கான் ஈ) கீன்ஸ்
6. காகித பணம் முறையை மேலாண்மை செய்வது
அ) மையப்பனவியல் அமைப்பு ஆ) மாநில அரசு
இ) மைய அரசு ஈ) வங்கிகள்
7. விலைவாசி மெதுவாக உயரும் பொழுது ஏற்படுவது
அ) தாவும் பணவீக்கம் ஆ) மிதமான பணவீக்கம்
இ) உயர் பண வீக்கம் ஈ) பண வாட்டம்
8. வணிக வங்கிகளின் பணிகளின் இரு பெரும் பிரிவு
அ) முதன்மை பணிகள் ஆ) இரண்டாம் நிலை பணிகள்
இ) மற்ற பணிகள் ஈ) மேற்சொன்ன அனைத்தும்
9. இந்தியாவில் வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை?
அ) வங்கி ஆ) அணு ஆற்றல்
இ) மருந்து உற்பத்தி ஈ) காப்பீடு
10. பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்காணும் இதன் துணை அமைப்பாகும்
அ) பன்னாட்டு பண நிதியம் ஆ) உலக வங்கி
இ) சார்க் ஈ) ஆசியான்
11. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு
அ) சீனா ஆ) ஜப்பான்
இ) இந்தியா ஈ) வடகொரியா
12. வரி கீழ்காணும் குணங்களைக் கொண்டது
அ) கட்டாயத்தன்மை ஆ) பிரதிபலன் கருதாமை
இ) வரி மறுப்பு ஒரு குற்றம் ஈ) மேல் கூறப்பட்ட அனைத்தும்
13. வரவு செலவு திட்டம் என்பதன் பொருள் ஆவது
அ) அரசின் செலவை விட அரசின் வருவாய் அதிகம்
ஆ) அரசின் நடப்பு கணக்கு செலவு நடப்பு கணக்கு வருவாயை விட அதிகம்
இ) அரசின் மொத்த செலவு மொத்த வருவாய் விட அதிகம்
ஈ) மேலே கூறியவற்றில் எதுவுமில்லை
14. உயிர் சார் என்ற வார்த்தையின் பொருள் என்ன?
அ) உயிர் வாழ்வன ஆ) உயிரற்றவை
இ) பருப்பொருள் ஈ) மேற்கூறப்பட்ட எதுவும் இல்லை
15. கார நிலம் அதிகமாக காணப்படும் சமவெளி எது?
அ) சிந்து கங்கை ஆ) வட இந்தியா
இ) கங்கை ஈ) மேற்கூறிய அனைத்தும்
16. கீழ்காண்பவற்றுள் எது பின் தங்கிய நாடுகளின் பண்புகளில் ஒன்றாகும்
அ) வறுமை நச்சு சுழற்சி
ஆ) பெரும் நுகர்வை அதிகப்படுத்துதல்
இ) தொழிற்சாலைகள் வளர்ச்சி
ஈ) அதிக அளவில் நகரமயமாதல்



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

17. முன்னோக்கு திட்டத்தின் மற்றொரு பெயர்
அ) குறுகிற கால திட்டமிடல் ஆ) நடுத்தர காலதிட்டமிடல்
இ) நீண்ட கால திட்டமிடல் ஈ) இவை எதுவும் இல்லை
18. ஒட்டுறவு என்னும் கருத்தினை முதலில் பயன்படுத்தியவர்
அ) நியூட்டன் ஆ) பியர்சன் இ) ஸ்பியர் மேன் ஈ) கால்டன்
19. திறந்து விடப்பட்ட பொருளாதாரத்தின் சுழல் ஒட்ட மாதிரி என்பது ________ ஆகும்
அ) இரு துறை மாதிரி ஆ) மூன்று துறை மாதிரி
இ) நான்கு துறை மாதிரி ஈ) மேலே சொல்லப்பட்ட அனைத்தும்
20. ஒரு நாட்டின் சராசரி வருமானம் என்பது
அ) தனிநபர் வருமானம் ஆ) தலைவீத வருமானம்
இ) பணவீக்க வீதம் ஈ) செலவிடக் கூடிய வருமானம்

## பகுதி - 2

***குறிப்பு:ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாயவினா 30) (7x2=14)***

21. வருமானச் சுழல் ஓட்டம் வரையறு.
22. தனிமனிதர் வருமானம் என்றால் என்ன?
23. முழு வேலைவாய்ப்பு வரையறு.
24. இறுதி நிலை சேமிப்பு நாட்டம் வரையறு.
25. மைய வங்கி என்பதை வரையறு.
26. வணிக வீதத்தினை விளக்குக.
27. பொதுக் கடன் என்பதன் பொருள் யாது?
28. சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக.
29. பொருளாதார முன்னேற்றத்தின் சமூக குறியீடுகளை பட்டியலிடுக.
30. தேக்க வீக்கம் என்றால் என்ன?

## பகுதி - 3

***குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். (கட்டாயவினா 40) (7x3=21)***

31. முதலாளித்துவத்தின் சிறப்பினை வரிசைப்படுத்துக.
32. தலைவீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.
33. J.B.சே விதியில் விளைவுகளைப் பற்றி குறிப்பு வரைக.
34. மிகை பெருக்கி விளக்குக.
35. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
36. சார்க்கின் பணிகளை சுருக்கமாக கூறுக.
37. வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.
38. வறுமை நச்சு சுழற்சியை எப்படி தடுப்பது.
39. இந்தியாவில் புள்ளியில் ஆதார அமைப்புகளின் முக்கியத்துவத்தை விவாதி.
40. வங்கியல்லா நிதி அமைப்புகளை பற்றி குறிப்பு தருக.

## பகுதி - 4

***குறிப்பு:அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (7x5=35)***

41. அ) முதலாளித்துவம், சமதர்மம், கலப்பு பொருளாதாரம் ஆகியவற்றின் தன்மைகளை ஒப்பிடுக. ***(அல்லது)***
ஆ) நாட்டு வருமான கணக்கீட்டில் உள்ள சிக்கல்கள் யாவை?
42. அ) வேலையின்மைகளின் வகைகளை விவரி.
***(அல்லது)***
ஆ) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி.
43. அ) இர்விங் ஃபிஷரின் பண அளவு கோட்பாட்டினை விளக்குக.
***(அல்லது)***
ஆ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.
44. அ) ஒப்புமை செலவு கோட்பாட்டினை விவரி.
***(அல்லது)***
ஆ) வெளிநாட்டு நேரடி முதலீட்டினால் ஏற்படும் நன்மைகளை குறிப்பிடுக.
45. அ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.
***(அல்லது)***
ஆ) மறைமுக வரிகளில் நன்மைகள் யாவை?
46. அ) புற விளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.
***(அல்லது)***
ஆ) பல்வேறு வகையான திட்டமிடலின் வகைகளை விவரி.
47. அ) புள்ளியியலின் இயல்பு எல்லைகளை விளக்கு.
***(அல்லது)***
ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடன் தொடர்பு கெழு வினை கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை X | 23 | 22 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை Y | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |



Scanned with OKEN Scanner
Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com